**பாடம் - 6**

**கேள்வி கணக்கு**

**الدرس السادس**

**الحساب**

அந்நாளில் மக்கள் கடும் தாகத்தில் இருப்பார்கள். அன்றைய ஒரு நாள் (நம் கணக்குப்படி) ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்குச் சமம். எனினும் (ஏக) இறைவனை நம்பியவனுக்கு அந்நேரம் கடமையான ஒரு தொழுகையை நிறைவேற்றுவதுபோல் சீக்கிரம் கழிந்துவிடும். முஸ்லிம்கள் நபி(ஸல்)அவர்களின் தண்ணீர்த் தடாகத்திற்கு தண்ணீர் அருந்த வருவார்கள்.
தண்ணீர்த் தடாகமென்பது நபி(ஸல்)அவர்களுக்கு மட்டும் அல்லாஹ் வழங்கிய மகத்தான அந்தஸ்தாகும். ஆகும். மறுமை நாளில் நபி(ஸல்) அவர்களின் சமுதாயத்தினர் அதில் நீர் அருந்துவார்கள். அதன் தண்ணீர் பாலை விட மிக வெண்மையாகவும், தேனைவிட இனிப்பாகவும் கஸ்தூரி வாடையை விட நறுமணம் உள்ளதாகவுமிருக்கும். அதன் பாத்திரங்கள் வானின் நட்சத்தி ரங்களின் எண்ணிக்கையளவு இருக்கும். அதில் ஒரு முறை நீர் அருந்தியவர் அதன் பின் ஒருபோதும் தாகிக்க மாட்டார்.
மஹ்ஷர் மைதானத்தில் மக்கள் தம்மிடையே தீர்ப்புச் செய்யப்படுவதையும் கேள்வி கணக்குக் கேட்கப்படு வதையும் எதிர்பார்த்து அங்கு நீண்ட நேரம் காத்திருப் பார்கள். அவர்கள் துன்பத்திலும் கடும் வெப்பத்திலும் இருக்கின்ற நிலையில் இவ்வாறு நிற்பதும் எதிர்பார்ப் பதும் நீண்டுவிடுகிறபோது மக்கள் தம்மிடையே தீர்ப்பு செய்யப்படுவதற்காக அல்லாஹ்விடம் தமக்காக பரிந்துரை செய்பவர்களைத் தேடுவார்கள். அப்போது ஆதம் (அலை) அவர்களிடம் வருவார்கள். அவர்கள் தமது இயலாமையைக் கூறிவிடுவார்கள்.பிறகு முறையே நூஹ்(அலை), இப்றாஹீம்(அலை), மூஸா(அலை), ஈஸா(அலை) என ஒவ்வொரு நபியிடமும் வருவார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது இயலாமையைக் கூறிவிடுவார்கள். இறுதியாக முஹம்மது(ஸல்) அவர்களிடம் வருவார்கள். அப்போது அவர்கள் அதற்கு தாமே தகுதியானவர் எனக் கூறி, அர்ஷுக்குக் கீழ் சுஜூது செய்வார்கள். அல்லாஹ் அவர்களுக்கு உதிக்கச் செய்கின்ற எல்லாப் புகழ் வார்த்தைகளையும் கொண்டு அல்லாஹ்வைப் புகழ்வார்கள். அப்போது 'முஹம்மதே! உமது தலையை உயர்த்தும், நீர் கேளும் கொடுக்கப்படுவீர். பரிந்துரை செய்யும், உமது பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படும்' எனக் கூறப்படும். அப்போது தீர்ப்புச் செய்யப்படுவதற்கும் கணக்குக் கேட்கப்படுவதற்கும் அல்லாஹ் அனுமதி வழங்குவான். முஹம்மது(ஸல்)அவர்களின் சமுதாயத்தினர் தாம் முதன் முதலில் கேள்வி கணக்கு கேட்கப்படுவார்கள்.ஒரு அடியான் செய்த செயல்களில் முதலாவதாக விசாரிக்கப்படுவது தொழுகை பற்றியாகும். அது சரியாக இருந்து ஏற்கப்பட்டுவிட்டால் ஏனைய செயல்கள் கவனிக்கப்படும். அது மறுக்கப்பட்டுவிட்டால் ஏனைய செயல்களும் மறுக்கப்படும்.
மேலும் ஒரு அடியான் ஐந்து காரியங்கள் பற்றி விசாரிக்கப்படுவான். அதாவது அவன் தனது வாழ்நாளை எவ்வாறு கழித்தான்? தன் வாலிபத்தை எதில் ஈடுபடுத்தினான்? தனது பொருளை எங்கிருந்து சம்பாதித்து எவ்வழியில் செலவழித்தான்? தான் கற்றதில் எந்த அளவுக்கு செயல்படுத்தினான்? என்றெல்லாம் விசாரிக்கப்படுவான்.

அடியார்களிடையே தீர்ப்பு வழங்கப்படும் காரியங்களில் முதல் காரியம் கொலைகள் பற்றியதாகும். அந்நாளில் பழிக்குப் பழிவாங்குவது நன்மை, தீமைகளைக் கொண்டே இருக்கும். ஒரு மனிதனின் நன்மை எடுக்கப்பட்டு அவனால் பாதிக்கப்பட்டவனிடம் கொடுக்கப்படும். நன்மைகள் தீர்ந்துவிட்டால் பாதிக்கப்பட்டவனின் தீமையை எடுத்து இவன் மீது சுமத்தப்படும்.

அங்கு ஸிராத் என்னும் பாலம் அமைக்கப்படும். அது முடியை விட மெல்லியதாகவும் வாளை விடக் கூர்மையாகவுமிருக்கும். அது நரகத்தின் மீது அமைக்கப்பட்டிருக்கும். மக்கள் அதில் அவரவர் செயல்களைப் பொறுத்து கடந்து செல்வார்கள். சிலர் கண்சிமிட்டும் நேரத்திற்குள் கடந்துவிடுவார்கள். சிலர் காற்று வேகத்தில் செல்வார்கள். வேறு சிலர் மிக விரைவாகச் செல்லும் குதிரை போன்றும் செல்வார்கள். இன்னும் தவழ்ந்து, தவழ்ந்து செல்பவர்களும் இருப்பார்கள். அப்பாலத்தில் இரும்புக் கொக்கிகள் இருக்கும். அவை மனிதர் களைப் பிடித்து நரகில் தள்ளிவிடும்.

(ஏக இறைவனை) நிராகரித்தவர்கள் நரகில் வீழ்வார்கள். நம்பிக்கை கொண்ட வர்களில் அல்லாஹ் நாடிய சில பாவிகளும் நரகில் விழுவார்கள். (ஏக இறைவனை) நிராகரித்தவர்கள் நிரந்தரமாக நரகிலேயே இருப்பார்கள். நம்பிக் கையாளர்களில் பாவிகள் அல்லாஹ் நாடிய அளவுக்கு வேதனை செய்யப்பட்டு பின் சொர்க்கம் செல்வார்கள்.

நபிமார்கள் ரசூல்மார்கள் மற்றும் நல்லோர்களில் தான் நாடியவருக்கு அல்லாஹ் பரிந்துரை செய்ய அனுமதி வழங்குவான். அதன்படி அவர்கள் நரகில் நுழைந்துவிட்ட- அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்காத சிலருக்கு பரிந்துரை செய்வார்கள். அவர்களை அல்லாஹ் நரகிலிருந்து வெளியேற்றுவான்.

இப்பாலத்தை கடந்து செல்லும் சொர்க்கவாசிகள் சொர்க்கத்திற்கும், நரகத்திற்குமிடையே அமைக்கப்பட்டிருக்கும் ஒரு பாலத்தில் நிற்பார்கள். அங்கு அவர்களில் சிலருக்கு சிலரிடமிருந்து கணக்குத் தீர்க்கப்படும். யாரேனும் தன் சகோதரனுக்கு அநியாயம் செய்திருந்தால் அவரிடமிருந்து அந்தச் சகோத ரருக்காகப் பழிக்குப்பழி வாங்கப்பட்டு, அவர்கள் பரஸ்பரம் திருப்தி அடையாத வரை சொர்க்கம் செல்ல முடியாது.

சொர்க்கவாசிகள் சொர்க்கத்திலும் நரகவாசிகள் நரகத்திலும் நுழைந்து விட்டால் மரணம் ஒரு ஆட்டின் வடிவில் கொண்டுவரப்பட்டு சொர்க்கத்திற்கும் நரகத்திற்குமிடையே அறுக்கப்படும். சொர்க்கவாசிகளும் நரகவாசிகளும் அதைப் பார்ப்பார்கள். பிறகு 'சொர்க்கவாசிகளே! உங்களுக்கு மரணமே கிடையாது இதில் நீங்கள் நிரந்தரமாக இருங்கள்" எனவும், 'நரகவாசிகளே! உங்களுக்கும் மரணமே கிடையாது இதிலேயே நீங்கள் நிரந்தரமாக இருங்கள்" எனவும் கூறப்படும். மகிழ்ச்சியால் ஒருவருக்கு மரணம் ஏற்படும் என்றிருந்தால் சொர்க்க வாசிகள் தங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியால் மரணித்து விடுவார்கள். துயரத்தால் ஒருவருக்கு மரணம் ஏற்படும் என்றிருந்தால் நரகவாசிகள் தங்களுக்கு ஏற்பட்ட துயரத்தைக் கண்டு மரணித்து விடுவார்கள்.